**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 107/2014** **Date:08.04.2026.**

**(PW1)- ஹரிராம்**

**<u>பிரதிவாதி</u>** <u>தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. புதிய சர்வே எண் 152/14 க்கு பழைய சர்வே எண் 5350P என்பதை காட்டுவதற்கு ஒப்புமை சான்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பழைய சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சர்வே எண் சொத்து எனது தாத்தா ராமசாமி நாடாருக்கு ஒரு வழக்கில் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு திருவனந்தபுரம் கூடுதல் சார்பு நீதிமன்றம் வழக்கு எண் 92/1960 ல் ஏ பட்டிகை 17 வது அய்ட்ட சொத்தாக கிடைத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம்.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சொத்துக்களுக்கு 1947 பின்பு அனைத்து வழக்குகளும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் தான் தாக்கல் செய்யப்படுகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1960 வருடத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட சொத்திற்கு திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றாலும் அவ்வாறான வழக்கில் பிறப்புவிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பொய்யானது என்றாலும் அவ்வாறு ஒரு தீர்ப்பு என்றாலும் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் எனது தாத்தா சொத்தை அனுபவம் செய்திருந்தால் அவர் பெயரில் பட்டா மற்றும் தீர்வை ரசீதுகள் இருந்திருக்கும் என்றால் இருந்திருக்கும் எனக்கு தெரியாது.

3. எனது தாத்தா பெயரில் எந்த வித பட்டாவோ தீர்வை ரசீதோ இல்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா சொத்தை பாகம் பிரிக்காமல் மோகன் தாஸ், துவாரகதாஸ் மற்றும் எனது தந்தை ராஜராம் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலஞ்சென்றுவிட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் மேற்படி நபர்கள் பெயரில் பட்டா மற்றும் தீர்வை ரசீது வந்திருக்கும் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு பட்டிகை சொத்தில் உரிமையில்லாததால் அவர்கள் பெயரில் பட்டாவோ தீர்வை ரசீதோ இல்லை என்றால் சரியல்ல.

4. அதன் பின்பு எனது அப்பாவும் அவருடன் பிறந்தவர்களும் பாகம்

செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் எப்போது பாகம் செய்து கொண்டார்கள் என்றாலும் பாகப்பத்திரத்தின் தேதி மற்றும் ஆவண எண் என்ன என்றால் அது பற்றி தெரியாது. நான் குறிப்பிடுவது போல் எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி நபர்களின் மோகன் தாஸ் திருமணம் செய்யவில்லை என்பதை காட்டவும் அவருக்கு அவரது சகோதரர்ரும் எனது தந்தையும் தான் ஒரே வாரிசு என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மோகன் தாஸ்க்கு மற்றொரு சகோதரர் துவாரகதாஸ் உண்டு என்றால் சரிதான். துவாரகதாஸ் -க்கு குழந்தைகள் உண்டு என்றால் சரிதான்.

5. நான் குறிப்பிடுவது போல் எடுத்துக்கொண்டாலும் மோகன்தாஸ் -க்கு மேற்படி துவாரகதாஸ்ம் அவரது குழந்தைகளும் வாரிசுகளாக வருவார்கள் என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்து இந்து வாரிசு உரிமைச் சட்டப்படி எனது தந்தைக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் தாவா சொத்திற்கு பட்டாவோ தீர்வை ரசீதோ இல்லை என்றால் சரிதான். அவருக்கு உரிமையில்லாததால் தான் அவர் பெயரில் பட்டா மற்றும் தீர்வை ரசீது இல்லை என்றால் சரியல்ல, உரிமை உண்டு.

6. எனது தந்தைக்கு சொத்தில் உரிமை இல்லை என்றாலும் எனவே எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த தான ஆவணம் (ஆவண எண் 697/2017) செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் பட்டிகை சொத்தை பொறுத்து கள்ள ஆவணம் என்றாலும் பட்டிகை சொத்தை பொறுத்து செல்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. எனவே செல்லாத ஆவணத்தின் அடிப்படையில் நான் பெற்றுள்ள பட்டா மற்றும் தீர்வை ரசீதும் செல்லாது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் 2013 ஆண்டுக்கு பின்னால் உள்ள ஆவணங்களை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதற்கு முந்தைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் நினைவில்லை.

7. இந்த வழக்கின் பிரதிவாதி என்மீதும் எனது சகோதரர் வழக்கறிஞர் ஜெயராம் மற்றும் ராஜகோபல் பெயரிலும் அ.வ.எண் 18/2015 இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண். 18/2015 வழக்கின் பட்டிகை சொத்து இவ்வழக்கு பட்டிகை சொத்தின் ஒரு பகுதி என்றால் சரியல்ல. 27.08.2016 அன்று இவ்வழக்கின் பிரதிவாதியும் அ.வ.எண். 18/2015 வழக்கின் வாதியுமான ஜோபிரகாஷ் பட்டிகை சொத்தின் கூரை பிரித்தார் என்றும் 28.08.2016 அன்று அது

குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக வழக்கில குறிப்பிட்டு ஒரு புகார் மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. மேற்படி புகார் மனுவை காவல் நிலையத்தில் கொடுத்ததற்கு எந்த ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் என்னிடம் உள்ளது. நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கு மூலத்திற்க்காக ஒரு பொய்யான புகாரை வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பிரதிவாதி எந்த பிரச்சனைக்கும் செல்லாதவர் என்றாலும் மிகவும் அமைதியானவர் என்றாலும் சரியல்ல. நான் திங்கள்சந்தை பகுதியில் செல்வாக்கு மிகுந்த நபர் என்றால் சரியல்ல.

9. எனவே என்னை பிரதிவாதியால் எதிர்க்க முடியாது என்பதால் அ.வ.எண். 18/2015 -ஐ நடத்துவதற்கு மேற்படி வழக்கு சொத்தின் வாடகைக்கு இருக்கும் ஒரு நபரான வழக்கறிஞர் ஜென்கின்ஸ்செல்வராஜ் என்பவரை அதிகார முகவராக நியமித்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றாலும் எனவே அ.வ.எண். 107/2014 வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**